Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 17, 2023

வெள்ளிக்கிழமை நவம்பர் 17, 2023 | ஒளி: 09 கதிர்: 130 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# டெங்கினால் குழந்தை மரணம்



எம்.யூ.எம்.சனூன்

தற்போதைய சீரற்ற காலநிலையினால் நாடளாவிய ரீதியில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

தொடர்ச்சி P2



# ஓரின பாலியல் துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு விளக்கமறியல்

செகீதாஞ்சன்

முல்லைத்தீவு - நெட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டியன்குளம் பகுதியில் தனியார் வகுப்பு நடத்தி வரும் ஆசிரியர் ஒருவர் ஆண் மாணவர்களுடன் நீண்ட காலமாக ஓரின பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டு, கைது செய்யப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# “தீர்ப்பை ஏற்கேன்”



ஷேன் செனவிரத்ன

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு தானும் மற்றவர்களும்தான் காரணம் என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்கப் போவதில்லை எனவும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தாம் பொறுப்புக் கூறுவேன் எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு சென்று, கண்டி- தலதா மாளிகையில் புதன்கிழமை (15) இரவு, தரிசனம் செய்த பின்னர் ஊடகவியலாளர்கள், “உங்களின் அரசாங்கத்தினால் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளதாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொள்வீர்களா” என கேள்வி எழுப்பினர்.

தொடர்ச்சி P2

# “குற்றமிழைத்தவர்கள் பங்குதாரர்களாக உள்ளனர்”



நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி குற்றமிழைத்தவர்களாக உயர்நீதிமன்றத்தால் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் பாராளுமன்றத்தில் அரச தரப்பில் முடிவுகளை எடுப்பவர்களாக, பங்குதாரர்களாக இருக்கின்றார்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இப்போது எடுக்கும் தீர்மானங்களிலும் இவர்களின் பங்கு தொடர்ச்சியாக இருந்து வருகின்றபோது எப்படி இந்த நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



# “எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள்”

## 28ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரினர் என்கின்றனர்

புகஜிந்தன்

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மீது கடந்த 2006 ஒகஸ்ட் 14ஆம் திகதி, நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, 16 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவரை ‘நிரபராதிகள்’ எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் 2023 நவம்பர் 10ஆம் திகதி விடுதலை செய்துள்ளது.

தொடர்ச்சி P2

# கனடாவுக்கு பறக்க முயன்றவர் கைது

டி.கே.பி.கபில


போலி கனேடிய வீசாவைப் பயன்படுத்தி டுபாய் ஊடாக கனடாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர், குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லை அமலாக்கப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால், வியாழக்கிழமை (16) காலை கைது செய்யப்பட்டார். இவர் மட்டக்களப்பை வசிப்பிடமாக கொண்ட 37 வயதுடைய தமிழர் ஆவார்.

டுபாய்க்கு வியாழக்கிழமை (16) காலை 08.15 மணிக்கு புறப்படவிருந்த எமிரேட்ஸ் எயார்லைன்ஸின் ரிகே-653 விமானத்தில் பயணிப்பதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் சமர்ப்பித்த ஆவணங்களில் கனேடிய வீசா குறித்து சந்தேகம் கொண்ட விமான அதிகாரிகள்,

தொடர்ச்சி P2

# 16 தங்க ஜெல் கெப்ஸ்யூல் சிக்கின



11 கோடி ரூபாய் பெறுமதியான 16 தங்க ஜெல் கெப்ஸ்யூல்கள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. இந்த பயணி வந்திறங்கிய விமானத்திற்குள் சுங்க அதிகாரிகள் நுழைந்து அவரை, வியாழக்கிழமை (16) அதிகாலை கைது செய்துள்ளனர். இவர், கொழும்பு-02 கொம்பனித் தெருவில் வசிக்கும் 32 வயதுடையவர் என்று அறியமுடிகின்றது. இவர், வியாழக்கிழமை (16) அதிகாலை 01.40 மணியளவில் டுபாயிலிருந்து Fly Dubai Airlines இன் FZ-569 என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# “100 மருந்துகளுக்கு விலை கட்டுப்பாடு”



அத்தியாவசிய மருந்துகளில் 100 மருந்துகளுக்கு விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஜயந்த சமரவீர எம்.பி எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சி P2

# SLC இடைக்கால குழு: 20 அன்று விசாரணை

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் இடைக்கால குழு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த வழக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி இந்த வழங்கு விசாரணைக்கு வருகிறது.

தொடர்ச்சி P2

# தரம் குறைந்த எரிபொருள் கலந்து விநியோகம்



தரம் குறைந்த எரிபொருள், நல்ல எரிபொருளுடன் கலந்து நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பாரிய ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

# “எனது உயிருக்கு அச்சுறுத்தல்”



கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியை வெளிப்படுத்த முயன்ற எனது உயிருக்கும், எனது குடும்பத்தினரின் உயிர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியாளர்கள் பலமுடையவர்கள்.

தொடர்ச்சி P2

# மஸ்கெலியாவில் புதிய காய்ச்சல்

செ.தி.பெருமாள்

நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தீபாவளிக்கு பின்னர் புது வகையான வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. “இதனால், மஸ்கெலியா, சாமிமலை, கிளங்கன்-டிக்கோயா ஆகிய வைத்தியசாலைகளில் வெளி நோயாளிகள் பிரிவிலும் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது” என மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி இர்ஷாட் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘கோப்’ குழுவில் ரஞ்சித் பண்டாரவின் மகன்:

# அவருடைய மகன் செய்தி செயலாளர்



கோப் குழு தலைவரின் மகன், அந்த குழுவில் பங்குப்பற்றியிருந்தமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்த சபாநாயர் மஹிந்த யாப்பா அபேவர்தன, வெளிநபர்கள் யாரும் கோப் குழுவில் அமரமுடியாது. உரிமையும் இல்லை. எனினும், அந்த மகன் அவருடைய செய்திச் செயலாளர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# “பிரச்சினைக்குரியது”



மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட எனக்கு, அரச நிதிக்குழுவில் வருகை தர முடியும், கருத்துத் தெரிவிக்க முடியாது என கூறி எதிர்க்கட்சித் தலைவராக கூட பேச முடியாதவாறு வாக்கெடுப்பு நடத்தி வாயை அடைத்தாலும், கோப் குழுவில் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் மகன் கனிஷ்க பண்டார அமர்ந்துள்ளார் என்றும் இதனால் தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கோப் குழு தலைவரின் மகன், கோப் குழுவில் அமரும் வரை பாராளுமன்ற அதிகாரிகளே நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்னவென்று பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவெனவும் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் கூட கோப் குழுவில் அமர்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், கோப் குழு அதிகாரியாக இல்லாத இவர் எவ்வாறு வந்து அமர்ந்தார் என்பதுதான் பிரச்சினைக்குரிய விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “நாங்கள் பங்கேற்கோம்



கிரிக்கெட் தொடர்பான விசாரணைகள் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார தலைமையில் முன்னெடுக்கப்பட்டால் கோப் குழுவில் நாங்கள் பங்கேற்கமாட்டோம் என தயாசிறி ஜயசேகர எம்.பி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவின் செயற்பாடுகளை சுட்டிக்காட்டி அவருக்கு எதிரான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# “தவறான எண்ணம் ஏற்படும்”



நிலையியற் கட்டளையின் பிரகாரமே அதன் தலைவரின் மகன் கோப் குழுவில் பங்குபற்றியுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற COPE குழுவில் அதன் தலைவர் ரஞ்சித் பண்டாரவின் மகன் கனிஷ்க பண்டார கலந்துகொண்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். கோப் தலைவரின் மகனுக்கு COPE குழுவில் அமருவதற்கான உரிமை என்ன என்று பிரேமதாச கேள்வி எழுப்பினார். அது போல கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார, கோப் குழுவின் தலைவராகச் செயற்பட முடியுமா என்றும் எதிர்க்கட்சித் தலைவர் வினவினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஓரின பாலியல் துஷ்பிரயோகம்...

பாண்டியன்குளம் பிரதேசத்தில் கணித பாடத்தில் சிறப்பு தேர்ச்சி பெற்ற ஒருவர், மாணவர்கள் மத்தியில் கணித பாடம் கற்பிப்பதில் சிறப்பான பெயர் பெற்றுள்ளார்.

இந்நிலையில் இவர், மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையம் வைத்தும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தியும் கல்விக் கற்பித்தும் வந்துள்ளார்.

இவ்வாறு கல்வி கற்றுவரும் ஆண் மாணவர்களை தன் வலைக்குள் வீழ்த்தி ஓரின பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளார். இந்த சம்பவம் கடந்த ஓராண்டாக நடைபெற்று வந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட போதும் பிரதேச செயலகத்தில் முறையிடப்பட்ட போதும் உரிய நேரத்தில் சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் கடந்த 13.11.23 அன்று மாணவன் ஒருவன், முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவன் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், குறித்த தனியார் ஆசிரியர் நெட்டாங்கண்டல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளதுடன், இது தொடர்பிலான சட்டவைத்திய பரிசோதனை மற்றும் முதற்கட்ட விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாக அறியக்கிடைத்துள்ளது.

## “தீர்ப்பை ஏற்கேன்”

நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று பதிலளித்த அவர், தேவையான உண்மைகளை கூற சந்தர்ப்பம் கிடைத்த பின்னர் பதில் வழங்கப்படும் என்றார்.

மேலும், இவ்வருட கட்சி மாநாடு உயர்மட்டத்தில் நடைபெறவுள்ளதாகவும், அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தொகுதி மட்டத்தில் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் எந்த நேரத்திலும் தேர்தலுக்கு தயாராக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

## 16 தங்க ஜெல் கெப்ஸ்யூல் சிக்கின

அவர் வந்த விமானத்திற்குள் பிரவேசித்த கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் இந்த பயணியை கைது செய்ததுடன், அவரது பயணப் பொதிகளை கைப்பற்றினர்.

06 கிலோ 423 கிராம் 9 மில்லி கிராம் எடையுள்ள தங்க ஜெல், அவரது சூட்கேஸில் 16 கெப்ஸ்யூல்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சுங்க அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது, இந்த தங்க ஜெல் கையிருப்பு அரசு இரசாயன பகுப்பாய்வாளருக்கு ஆய்வு அறிக்கையைப் பெற அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அவரது கையடக்கத் தொலைபேசி தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையைப் பெறவும் விமான நிலைய சுங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த அறிக்கைகள் விமான நிலைய சுங்க அதிகாரிகளுக்கு கிடைக்கும் வரை அவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## டெங்கினால் குழந்தை மரணம்



புத்தளம் பிரதேசங்களிலும் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளதுடன், நகரில் டெங்கு நோய் காரணமாக குழந்தையொன்று வியாழக்கிழமை (16) மரணித்துள்ளது.

நகரசபை செயலாளர் பிரீத்திகாவின் ஆலோசனைக்கமைய நகரசபை டெங்கொழிப்பு வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளங்கண்டு அவற்றை அழிப்பதுடன், தங்களது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்து உயிராபத்துக்களைத் தவிர்க்குமாறு நகரசபை நிர்வாகம் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், டெங்கு பரவும் அபாயகரமான சூழலை வைத்திருப்போருக்கு எதிராக நகரசபையினால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் நகரசபை நிர்வாகம் அறிவித்துள்ளது.

## “குற்றமிழைத்தவர்கள் பங்குதாரர்களாக உள்ளனர்”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 3ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட யார் காரணம் என்பதனை உயர் நீதிமன்றம் நாட்டுக்கு அறிவித்துள்ளது. அந்த தீர்ப்பில் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் யார் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கு எதிராக இந்த பாராளுமன்றம் என்ன நடவடிக்கையை எடுக்கப்போகின்றது என்பதனை சபாநாயகர் தெளிவுபடுத்த வேண்டும் என்றார்.

மேலும், இந்த பெயர் குறிப்பிடப்பட்டவர்களுக்கு என்னவிதமான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதனை அரசாங்கமோ அல்லது அவர்களுக்கு வாக்களித்த சிங்கள மக்களோ சிந்திக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானது 2019 ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் எடுத்த தீர்மானங்கள் மட்டுமல்ல.

1948ஆம் ஆண்டுக்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களை இல்லாதொழிப்பதற்காக தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்கள் இன ரீதியாக எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில்தான் இந்த பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டது என்றார்.

## கனடாவுக்கு பறக்க முயன்றவர் கைது

அவரை குடிவரவு மற்றும் எல்லை அமுலாக்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். தொழில்நுட்ப சோதனையில் இந்த வீசா போலியானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இவரை கைது செய்த குடிவரவு எல்லை அமுலாக்கத்துறை அதிகாரிகள், அவர்களிடம் நடத்திய விசாரணையில், இந்த வீசாவை தயார் செய்ய தரகரிடம் 30 இலட்சம் ரூபாய் கொடுத்ததாகவும், கனடா சென்ற பிறகு மேலும் 30 இலட்சத்தை தருவதாக ஒப்புக்கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## “100 மருந்துகளுக்கு விலை கட்டுப்பாடு”

அமெரிக்க டொலரின் அதிகரிப்போடு நாட்டில் அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் மூன்று மடங்கிலிருந்து ஆறு மடங்கு வரை அதிகரித்துள்ளன.

சில மருந்துகளின் விலை 600 ரூபாவால் அதிகரித்துள்ளது. அந்த வகையில் மருந்துகளின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாதா? அதற்கான நட வடிக்கைகளை சுகாதார அமைச்சர் மேற்கொள்ள முடியாதா? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன,

தற்போதும் நாட்டில் விலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள 100 மருந்து வகைகள் காணப்படுகின்றன. சந்தையில் காணப்படும் என்டீ டயபடிக், என்டீ ஹைபடென்ஸ்,கார்டியோலோஜிகல்ஸ் உள்ளிட்ட 50 வகை மருந்துகளும் அதற்குள் உள்ளடங்குகின்றன. அவை அனைத்தும் பிரதான மருந்து வகைகள் பட்டியலைச் சேர்ந்தவை.

அவைகளுக்கு விலைக் கட்டுப்பாடு மேற்கொண்டுள்ளதுடன், அதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்வது அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அதிகார சபையே. அதற்கே விலைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் உள்ளது என்றது.

## SLC இடைக்கால குழு: 20 அன்று...

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நியமித்த குழுவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் கடந்த 07ஆம் திகதி 14 நாள் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த தடை உத்தரவை நீக்குமாறு கோரி விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை, அவதூறான கருத்துக்களை வெளியிட்டதற்காக விளையாட்டுத்துறை அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிக்கை வெளியிட்டது.

அந்த அறிவிப்பின்படி, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர், உப தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் விளையாட்டு அமைச்சருக்கு எதிராக 2.4 பில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரம் குறைந்த எரிபொருள் கலந்து விநியோகம்

எனவே, இது தொடர்பில் சரியான தகவல்களை இந்த சபைக்கு முன்வைக்கவேண்டும். என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) விசேட கூற்றை முன்வைத்த போதே இவ்வாறு வலியுறுத்தினார்.

இப்போது பல ஆய்வு அறிக்கைகள் மூலம் தரக்குறைவான எரிபொருள் என உறுதிப்படுத்தப்பட்ட எரிபொருள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அமைச்சர் என்ன சொன்னாலும் அது நடந்துள்ளதால் இது தொடர்பில் சரியான தகவல்களை இந்த சபைக்கு முன்வைக்கவேண்டும். தரம் குறைந்த எரிபொருள் கொண்டுவந்த கப்பல், அதன் முதலாவது இரண்டாவது ஆய்வு அறிக்கைகள்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் நிறுவனங்கள் எடுத்த தீர்மானம் என்ன?

அத்துடன் இந்த தரம் குறைந்த எரிபொருள் திருகோணமலை, கொலன்னாவைக்கு அனுப்பி இருக்கிறதா என்ற விடயங்களை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த தரக்குறைவான எரிபொருள் நல்ல எரிபொருளுடன் கலந்து நுகர்வோருக்கு வழங்கப்பட்டு உள்ளதாகவே எமக்கு தகவல் கிடைத்திருக்கிறது என்றார்.

## “எனது உயிருக்கு...

எனவே எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென என சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) விசேட கூற்றை முன்வைத்தே இக்கோரிக்கையை விடுத்தார்.

கிரிக்கெட் சபையில் இடம்பெறும் ஊழல் மோசடியை வெளிப்படுத்த முயற்சித்ததால் நான் இன்று நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளேன். கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா அண்மையில் ஊடக சந்திப்பை நடத்தி அமைச்சர் குறிப்பிடும் இடத்துக்கு நாங்கள் செல்வோம். இல்லையென்றால் அவரை நாங்கள் பிறிதொரு இடத்துக்கு மாற்றுவோம் என்று கூறியுள்ளார்.

சுதத் சந்திரசேகரவுக்கு நான் விளையாட்டுத்துறை அமைச்சில் உரிய அந்தஸ்து வழங்கினேன். அவரையும் இன்று மோசடியாளர்கள் பிடித்துக் கொண்டுள்ளார்கள். அவனை நான் அடிப்பேன் என்று இவர் குறிப்பிட்டுள்ள குரல் பதிவு தற்போது வெளியாகியுள்ளது. இவர்களின் கருத்தால் எனது உயிருக்கும், எனது குடும்பத்தினரின் உயிர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்விருவரின் கருத்து தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளேன் என்றார்.

## “பிரச்சினைக்குரியது”

இங்கு சட்டம் பாரியளவில் மீறப்பட்டுள்ளதாகவும், கோப் குழுவின் தலைவராக செயற்படுவதற்கு தகுதியில்லை என்றும் சகல ஆதாரங்களுடனுமே தாம் பேசுவதாகவும் எதிரக்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கோப் குழுவின் நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (16) கேள்வி எழுப்பும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனவே, பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவுக்கு கோப் குழுவின் தலைவராக இருக்க தார்மீக உரிமை இல்லை என்றும் இவ்வாறான கேலிக்கூத்தான செயல்களை செய்யக்கூடாது எனவும் இது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## “நாங்கள் பங்கேற்கோம்

இதனையடுத்து, எழுந்து தயாசிறி ஜயசேகர எம்.பி., கோப் குழுவின் தலைவர் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை.

ஆகவே, கிரிக்கெட் தொடர்பான விசாரணைகள் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார தலைமையில் முன்னெடுக்கப்பட்டால் கோப் குழுவில் நாங்கள் பங்குப்பற்ற மாட்டோம் என்றார்.

## “தவறான எண்ணம் ஏற்படும்”

இதற்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நிலையியற் கட்டளையின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இல்லாவிட்டால் நாட்டுக்கு தவறு செய்துவிட்டோம் என்ற தவறான எண்ணம் ஏற்படும் என்றார்.

## “எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள்”

அதாவது, குறித்த வழக்கில், மாத்தளையை சேர்ந்த குடும்பஸ்தரான சுப்பிரமணியம் சுரேந்திரராஜா சார்பில், சட்டத்தரணிகள் தனுக்க நந்தஶ்ரீ, எஸ்.அனுஷாங்கன் மன்றில் முன்னிலையாகி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையில் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது வாதத்தின் மூலம் வலுவிழக்கச் செய்திருந்தார்.

அதேவேளை, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித்தனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் சார்பில், முன்னால் நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணி கனகா சிவபாதசுந்தரம் முன்னின்று திறம்ப வாதாடினர்.

ஒரு சந்தேகநபரை ‘நிரபராதி’ என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15 ஆண்டுகள் எடுத்துள்ளதென்பது உண்மையில் கவலைதரும் விடயமே. இருப்பினும், மிகநீண்டகாலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்துவந்த இவர்கள் விடுதலைபெற்று அவர்கள்தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியை தருகிறது.

இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் மீதமிருக்கும் எமது உறவுகள், “எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள் எனக்கூறி விழி கலங்க வழியனுப்பி வைத்துள்ளனர்.

ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேகநபர்களாக நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், 15 முதல் 28 ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10 பேரையும், ஜனாதிபதி பொதுமன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிருடன் விடுவிக்க வேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் வினயமுடன் வேண்டுகை செய்கின்றோம் என்றார்.

எவ்வாறாயினும், கடந்த பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பானது, மீதமுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில், நடைமுறைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## மஸ்கெலியாவில் புதிய காய்ச்சல்

இப்பகுதியில் பெய்த கடும் மழைக்குப் பின்னர் காலை வேளையில் சற்று உஷ்ணமான காலநிலை தோன்றியுள்ளது. இதனால் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் வாந்தி, வயிற்றுப் போக்கு, வைரஸ் காய்ச்சல் தோன்றியுள்ளது. இதனால் நாளாந்தம் அதிக அளவில் வெளி நோயாளிகள் பிரிவிலும், தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றார்.

கொதித்து ஆறிய நீரை பருகுமாறும். தேவையற்ற பலகாரங்களை உட்கொள்ள வேண்டாம் எனவும் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும் என்றும் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது, சுவிட்டர், தொப்பியை அணிந்து செல்லவேண்டுமென மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.



# காலியில் USAID–SLTDA கற்றல் கண்காட்சிக்கு பாராட்டு

COLOMBO, Sri Lanka - சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய மெரிக்க முகவரகம் (USAID) மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்து அதிகாரசபை (SLTDA) என்பன இணைந்து அக்டோபர் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலியில் நடத்திய நிலையான சுற்றுலா கற்றல் கண்காட்சியை சுற்றுலாத் துறையில் உள்ள சிறு வணிக ஏற்பாட்டாளர்கள் பாராட்டியுள்ளனர்.

“இது ஒரு சிறந்த முன்முயற்சி மற்றும் சிறந்த திட்டமாகும், இது பரந்த அளவிலான தலைப்புகளில் எங்கள் அறிவை மேம்படுத்த உதவியது" என்று சிறிய ஹோட்டல் சொந்தக்காரரான பங்கேற்பாளர் தெரிவித்துள்ளார். அத்துடன், "நாங்கள் சுற்றுலாத் துறையில் ஒப்பீட்டளவில் புதிதாக நுழைந்தவர்கள், மேலும் எங்கள் ஹோட்டல் அறைகள் எப்போதும் நிரம்பியே இருப்பதற்கு செல்வாக்குச் செலுத்தும் பல அம்சங்கள் உள்ளன என்பதை நான் இன்று உணர்ந்தேன். இது மிகவும் சிறந்த அனுபவமாக இருந்தது” என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்நிகழ்வு 100க்கும் மேற்பட்ட சிறு வணிகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்களை ஈர்த்திருந்தது மற்றும் நாடு முழுவதும் நடைபெறும் இதேபோன்ற நிகழ்வுகளில் இது இரண்டாவது நிகழ்வாகும். முதல் நிகழ்வு கொழும்பில் செப்டெம்பர் மாதம் நடைபெற்றது.

தற்போதைய டிஜிட்டல் மார்க்கெட்டிங், பயணப் போக்குகள் மற்றும் தங்கள் அன்றாட நடவடிக்கைகளில் நிலைத்தன்மையை எவ்வாறு இணைப்பது என்பதைப் பற்றி பங்கேற்பாளர்கள் கற்றுக்கொண்டனர்.

பங்கேற்பாளர்கள் தொழில்துறை முன்னோடி வழிகாட்டுதல் அமர்வுகளுக்கான அணுகலைப் பெற்றனர் மற்றும் தயாரிப்பு மேம்பாடு, சந்தைப்படுத்தல், விளம்பரங்கள் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் கருவிகளையும் பெற்றுக்கொண்டனர்.

இந்த கற்றல் கண்காட்சியானது, சிறு வணிகங்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும், இலங்கையின் வர்த்தக அடையாளத்தை சிறப்பாக நிறுவுவதற்கும், அதன் ஈர்ப்பு மற்றும் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கும், வேலைகளை உருவாக்குவதற்கும் உதவும், இந்த வருடம் ஜூன் 12ஆம் திகதி புதிய முக்கிய சுற்றுலா வகைகளை அறிமுகப்படுத்தியதன் நேரடித் தொடர்ச்சியாக இது இருந்தது.

இலங்கையின் பன்முக சுற்றுலா சலுகைகள், சர்வதேச மற்றும் உள்நாட்டு பயணிகளின் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய சிறு வணிகங்கள் மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளன. ஒரு செழிப்பான சுற்றுலாத்துறையை நிறுவ, சிறு வணிக உரிமையாளர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களின் தயாரிப்புகளைச் செம்மைப்படுத்தவும், பயணிகளின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நிலையான விருந்தினர் அனுபவங்களை வழங்கவும் அதிகாரம் அளிப்பது இன்றியமையாதது.

பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் சுற்றுலா இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியமானது. தொற்றுநோய்க்கு முந்திய சுற்றுலா, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. 2018இல் US $4.3 பில்லியன் வருவாயை ஈட்டியது மற்றும் மூன்று மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. இலங்கை தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஊக்கமளிக்கும் வகையில் மீள் எழுச்சியை அனுபவித்து வருகிறது, மேலும், 2022ஆம் ஆண்டு முழுவதும் பதிவு செய்யப்பட்ட 720,000 எண்ணிக்கையை எளிதாக தாண்டி, 2023ஆம் ஆண்டுக்கான ஒரு மில்லியன் விருந்தினர்களை வரவேற்கும் சாதனையை செப்டெம்பர் கடைசி வாரத்தில் கொண்டாடியுள்ளது.

“நம்மில் பெரும்பாலோரின் கண்களைத் திறந்த இந்த நிகழ்வை நடத்தியதற்காக USAID மற்றும் SLTDA என்பனவற்றுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நாம் பல தலைமுறைகளாகப் பயன்படுத்திய மிகப் பழைமையான முறையில் சுற்றுலாவைப் பார்க்கப் பழகிவிட்டோம், இன்றைய நிகழ்வில் பல அற்புதமான புதிய அணுகுமுறைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன, இது எமது நாட்டைச் சிறந்த முறையில் சந்தைப்படுத்துவதற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கும் உதவும்” என சுற்றுலாப் பணியகத்தின் தென் மாகாண தலைவர் சன்ன சாலிய மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

பெண்கள், சிறுபான்மை சமூகங்கள் மற்றும் பிற பின்தங்கிய குழுக்களுக்கு அவர்களின் சொந்த தனித்துவமான வழியில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் ஒரு இலக்கை உள்ளடக்கிய வாய்ப்புகளை வழங்க இது அனுமதிக்கிறது.




# திரிபோசா திருட்டு: மூவர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

சுகாதார அமைச்சின் தாய் சேய் நலன்புரி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு எடுத்து வரப்பட்ட திரிபோசா பக்கட்டுகளை திருடி விற்பனை செய்த மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு பயணித்த புகையிரத்தின் சரக்கு பெட்டியில் எடுத்துவரப்பட்ட திரிபோசா பக்கட்டுகளில் 750 கிராம் எடை கொண்ட 150 பக்கெட்டுகளை திருடிய நபர்களே இவ்வாறு மட்டக்களப்பு தலைமையக



பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும், கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.




# நாடு திரும்பிய மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

■ பு.கஜிந்தன்

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகளின் பின்னர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக நாடு திரும்பிய வடமராட்சி கிழக்கு, குடத்தனையை சேர்ந்த மூவரின் விளக்கமறியலை நீடிக்க பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

போர் காரணமாக குடத்தனை வடக்கைச் சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி (வயது-58), அவரது மகளான சின்னராஜா சுதர்சினி (வயது-42) மகனான சின்ன ராஜா சுதாகரன் (வயது-39) ஆகியோர் 1990ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

தற்போது படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கி இருந்தபோது பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த மாதம் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் புதன்கிழமை (15) முற்படுத்தப்பட்டபோது அவர்களின் விளக்கமறியலை நீதி மன்றம் நீடித்துள்ளது.

# மட்டக்களப்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



■ வா.கிருஸ்ணா

பரதக்கலைக்கு எதிராக கூறியுள்ள கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பு விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 45 நிமிட நேரம் விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவககத்தின் முன் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

"பரதக்கலை" சம்பந்தமாக இஸ்லாமிய மௌலவி ஒருவரின் சர்ச்சைக்குரிய மேடைப் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

நடன உடையுடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள், கையில் பதாகையுடன் எதிர்ப்பு கோசங்களிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பரதக்கலை என்பது தமிழர்களின் பூர்வீக கலையாகும். அதனை தெய்வீக கலையாக நாங்கள் கடந்துவரும் நிலையில், அதனை கீழ்த்தரமான கலையாக விமர்சனம் செய்த குறித்த நபருக்குக் கண்டனம் தெரிவிப்பதுடன், அவரின் கருத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மின் சாதனத்தில் முடியை தயார் செய்த தாய் மரணம்



மின் சாதனம் மூலம் தலைமுடியை தயார் செய்து கொண்டிருந்த தாய் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக கஹதுடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொல்கசோவிட்ட பிரதேசத்தை சேர்ந்த காஞ்சனா சுபாசினி லொகுஹேவகே என்ற 30 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவருக்கு மூன்று வயதில் பெண் பிள்ளையும் உள்ளது.

தேசிய பயிலுனர் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபையில் முகாமைத்துவ உதவியாளராக சிறிது காலம் பணியாற்றிய சுபாஷினி, குழந்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதாட்டியை கொலை செய்த மூவர் கைது

■ எஸ் தில்லைநாதன்

யாழ். வடமராட்சி - அல்வாய் கிழக்குப் பகுதியில் மூதாட்டி ஒருவரைக் கழுத்து நெரித்து கொலை செய்த மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி அல்வாய் கிழக்கு அல்வாய் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து 89 வயதுடைய பழனிப்பிள்ளை தில்லைராணி என்ற மூதாட்டி சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

சடலத்தில் காயங்கள் காணப்பட்டதன் காரணமாக பிரேதப் பரிசோதனை அறிக்கையில் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உடற்பாகங்களை இரசாயன பகுப்புக்கு ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவ்வீட்டில் இருந்த கணவன் - மனைவி மற்றும் வீட்டுப் பணிப்பெண் ஆகிய மூவர் நெல்லியடி பொலிஸாரால் இம்மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டு பருத்துத்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு புதன்கிழமை (15) மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பருத்தித்துறை நீதவான் மூன்று சந்தேக நபர்களுக்கான விளக்க மறியலை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

# ஞாயிறன்று ஒலிப்பதிவு

■ ஏ.எம்.ஜலீல்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கந்துரட்ட (கண்டி) முஸ்லிம் சேவை ஏற்பாடு செய்துள்ள பாடசாலைகளுக்கு இடையிலான அறிவுச்சுரங்கம் கேள்வி - பதில் போட்டி ஒலிப்பதிவு ஞாயிற்றுக்கிழமை (26) கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் தேசிய கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இங்கு முதற்கட்ட போட்டி ஒலிப்பதிவு நிகழ்வின்போது கண்டி மாவட்டத்திலிருந்து 24 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளதாக இச்சேவையின் அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.முனாஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கான பூரண அனுசரணையை கண்டி நேத்ரா புத்தகசாலை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவிகள்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

தமிழ் தினம் மற்றும் ஆங்கில தின போட்டிகளில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மட்டக்களப்பு - வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகள் பாடசாலை அதிபர் தலைமையில் திங்கள்கிழமை (15) கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது சாதனை படைத்த மாணவிகளை மட்டு. நகர் காந்தி பூங்கா முன்றலில் இருந்து பேண்ட் வாத்திய இசை முழங்க ஆசிரியர்களினால் மாணவிகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக கல்லூரியின் பிரதான மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பரத நடனத்தில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்ட மாணவி விக்னேஷ்வரன் இஷானிகா மற்றும் ஆங்கில டிக்டேசன் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்ட மாணவி சசிகுமார் ஹர்ஷிகா ஆகிய மாணவிகளே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.



# குடிநீர் திட்டம் கையளிப்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

ஓட்டமாவடி - மாஞ்சோலை அல் ஹிரா வித்தியாலயத்தில் குடிநீர் திட்டம் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (15) நடைபெற்றுள்ளது.

சமூக செயற்பாட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க இத்திட்டத்தை மருதமுனை பைதுல் ஹெல்ப் நிறுவனம் பாடசாலைக்கு அமைத்துக் கொடுத்துள்ளது.



பாடசாலை மாணவர்களின் நலன்கருதி குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பைதுல் ஹெல்ப் நிறுவனப் பணிப்பாளருக்கு பாடசாலை அதிபர் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# திருடர்கள் தொலைவில் இல்லை

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட பல திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மக்களை அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்துதல் விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறுமை காரணமாக பரவலாக திருட்டுச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

திருடர்கள் தொலைவில் இல்லை உங்களுக்கு நன்கு தெரிந்தவர்களாகவும் ஏன் உங்களது உறவினர்களாகவும் இருக்கலாம் எனவே எப்போதும் அவதானமாக இருங்கள் என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், ஒலிபெருக்கி அறிவிப்பு ஊடாகவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# மயிலத்தமடு–மாதவனை மாடுகளும் பஞ்சாப் நாய்களும்

கால்நடை விலங்குகளை வளர்ப்பதற்கு ஆசையில்லாதவர்கள் இருக்கமாட்டார்கள். அதுமட்டுமன்றி பறவைகளையும், சிலர் பொழுது போக்குக்காகவும், பெரும்பாலானோர் குடும்ப வருமானத்துக்காகவும் வளர்ப்பார்கள், இன்னும் சிலர் தங்களுடைய பாதுகாப்புக்காக குடும்பங்களில் நாய்களை வளர்ப்பர்.

இந்த கால்நடைகளில் மாடுகள் அதிக வருமானத்தை ஈட்டித்தருகின்றன. அதற்காக மாடாய் உழைத்து ஓடாய் தேயவேண்டும். இவ்வாறு வளர்க்கப்படும் மாடுகளை, சிலர் திருடிச்சென்று இறைச்சிக்காக விற்றுவிடும் சம்பவங்களும் நடைபெறாமல் இல்லை. சினை மாடுகளையும் அறுத்துச்சென்று விற்று விடுகின்றனர்.

தங்களால் வளர்க்க முடியாவிடின், அவை கட்டாக்காலிகளாக மாறிவிடுகின்றன. இதனால், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பல விபத்துக்களும் இடம்பெறுகின்றனர். சிலர் மரணித்தும் உள்ளனர். கால்நடை விலங்குகளை வளர்த்து உழைக்கும் மக்களுக்கு போதுமான சலுகைகளை அரசாங்கம் வழங்குவதில்லை. 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில், பால் உற்பத்தித்துறை மதிப்புச் சங்கிலியில் உள்ளவர்களின் நிதித் தேவையை எதிர்கொள்வதற்கு மேல்நிதியிடல் கடன் வழிகளில் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை வள அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான விவசாயப் பண்ணைகள் அனைத்தையும் வினைத்திறனுடன் பயன்படுத்தி தனியார்த்துறை பங்களிப்புடன் தினசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 20 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு , மாதவனை பகுதி மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில், தமிழ்த் தரப்பினரைத் தவிர, ஏனைய தரப்பினர் அதீத கவனத்தைச் செலுத்துவதாகத் தெரியவில்லை. அங்கு நிலைமை நாடுகளுக்கு நாள் மோசமடைந்துள்ளது.

அங்கு, வாய் பேச முடியாத மாடுகளுக்கு வாய்க்குள் வெங்காய வெடியை வைத்து வாயை சிதறடிக்கின்றீர்கள். இதனால் அந்த மாடுகள் உணவுகூட அருந்த முடியாமல் அணு அணுவாக செத்துப்போகின்றன என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.ஸ்ரீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புத்தரின் தர்ம போதனைகளில் ஒன்றான காருண்யம், அங்கு அப்பட்டமாக மீறப்படுகின்றது.

இதற்குப் பின்னால், காவியுடை தரித்தவர்களே நினைகின்றனர் என்பதை மறுக்கமுடியாது. பூரண (போயா) தினங்களில் முட்டையைக்கூட உட்கொள்ளாத பௌத்தர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால், மயிலத்தமடு- மாதவனை பகுதி மாடுகளுக்கு எதிரான அட்டூழியங்கள் விபரிக்க முடியாதவை.

இதனிடையே, கட்டாக்காலிகள் மனிதர்களைத் தாக்குவது இந்தியாவில் அதிகரித்துள்ளது. தெரு விலங்குகளால் பாதிக்கப்பட்டமை தொடர்பாக 193 மனுக்கள் பஞ்சாப்-ஹரியானா உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. தெருநாய்க் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு பல் அடையாளத்துக்கு 10 ஆயிரம் ரூபாயும், 0.2 சென்டி மீட்டர் காயத்துக்கு 20 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டை வழங்க வேண்டும்” என உத்தரவிட்டுள்ளது. பஞ்சாப் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை முன்மாதிரியாகக் கொண்டு, மயிலத்தமடு மாடுகளை கொல்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தல்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார்.

எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” எனக் கேட்டுவிட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைக் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” எனக் கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது.

கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 27

# கண்டி யாத்திரையும் இம்புல்கொடே வீரயாவும்



மக்கள் குரல்

பண்டா - செல்வா உடன்படிக்கை என்று அறியப்பட்ட பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கையானது சுதந்திரத்துக்குப் பின்னர் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட முதலாவதும் முதன்மையானதுமான நடவடிக்கையாகும். ஆனால் இவ்வுடன்படிக்கைக்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. இங்கு இரண்டு விடயங்களை நோக்குதல் தகும். முதலாவது அதேவேளை, பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்த சிங்களப் பேரினவாதிகள் எல்லாரும் ஒரே நோக்கத்திற்காக எதிர்த்ததாகக் கூற இயலாது. அதற்கு வெவ்வேறு நோக்குகள் இருந்தன. ஆனால், எதிர்ப்பில் ஒன்றுபட்டு பேரினவாதத்தை வெளிப்படுத்தினர். இரண்டாவது சிங்களப் பேரினவாத சிந்தனைக்குட்பட்ட எல்லாருமே அவ்வுடன்படிக்கையை எதிர்த்தனர் என்று சொல்ல முடியாது.

வெறித்தனமாக சிங்களப் பேரினவாதத்தை முன்னெடுத்த கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனநாயக்க போன்றவர்களும் தீவிரவாத புத்த பிக்குமாரும் இலங்கையில் சிங்கள பௌத்த ஆதிக்கத்திற்கு மறுப்பான முறையில் சிறுபான்மைச் சமூகங்கட்கு எவ்விதமான சலுகைகளும் வழங்கப்படலாகாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். இவர்களது நிலைப்பாடு சிங்கள பௌத்த நாடாக மட்டுமே இலங்கை திகழ வேண்டும் என்பதே. அவர்களது பிரதான நோக்கம் பண்டாரநாயக்கவைத் தமக்கு உடன்பாடாகச் செயற்படவைப்பதே. இதற்கு பேரினவாதத்தைப் பயன்படுத்தினார்களே தவிர அவர்கட்கு வேறு நோக்கங்கள் அப்போதைக்கு இருக்கவில்லை. 1956இல் பண்டாரநாயக்கவின் வெற்றி முதன்முறையாக உயர்குடி அல்லாத மற்றோருக்கு அரசியல் செல்வாக்கைச் சுவைப்பதற்கான வாய்ப்பை வழங்கியது. அதைத் தவறவிட அவர்கள் தயாராக இல்லை. பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்த கொஞ்சக் காலத்திலேயே இவர்களிடையே முரண்பாடுகள் தோன்றின. இந்நிலையில், பண்டாரநாயக்கவை கட்டுக்குள் வைக்க இந்த உடன்படிக்கையை பயன்படுத்த அவர்கள் தயாரானார்கள்.

மறுபுறம் 1956 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த படுதோல்வி கட்சியின் இரண்டு பெரும் தலைவர்களை அரசியலில் இருந்து ஓரங்கட்டியது. ஒருவர் டட்லி சேனாநாயக்க, மற்றவர் ஜோன் கொத்தலாவல. இந்நிலையில், ஊசலாடிக்கொண்டிருந்த கட்சியை யார் காப்பாற்றுவார்கள் என்ற வினா எழுந்தது. அடுத்த நிலைத் தலைவர்களில் மூத்தவரான ஜே.ஆர்.ஜயவர்த்தன இதைப் பயன்படுத்தினார். ஜே.ஆர்.ஜயவர்த்தன சிங்கள மக்களிடையே பண்டா-செல்வா உடன்படிக்கை பற்றி இருந்திருக்கக் கூடிய ஐயங்களைப் பயன்படுத்தி உடன்படிக்கையை எதிர்ப்பதன் மூலம் பண்டாரநாயக்காவைப் பலவீனப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதுடன், தன்னையும் கட்சிக்குள் பலப்படுத்திக் கொள்ள இதை நல்ல வாய்ப்பாகக் கண்டார். பண்டா- செல்வா உடன்படிக்கை பற்றி ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் கவனம் கொள்ளவில்லை என்பதும் கவனிப்புக்குரியது.

இந்நிலையில், உடன்படிக்கையை எதிர்த்து கண்டி யாத்திரையை ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒழுங்கு செய்தார். ஐக்கிய தேசியக் கட்சி கண்டிக்கு பேரணியாக சென்று தலதா மாளிகையில் உடன்படிக்கைக்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்ய தீர்மானித்தது. கொழும்பு-கண்டி வீதியில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை கட்டம் கட்டமாக அணிவகுத்து 72 மைல் தூரத்தை கடந்து அதனை ஒரு மாபெரும் காட்சியாக்க ஐக்கிய தேசியக் கட்சி விரும்பியது. நடைபயணத்தின் இறுதியில் ‘பட்டிருப்புவ’வில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

1957ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதி கண்டியில் ஒன்றுகூடி, பண்டாரநாயக்காவுக்கும் செல்வநாயகத்துக்கும் இடையிலான உடன்படிக்கையின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத்துவதைத் தடுப்பதாகத் தலதா மாளிகையின் முன் சபதம் எடுக்குமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடங்களின் மகாநாயக்கர்கள் பகிரங்க அழைப்புக் கடிதம் ஒன்றை வழங்குமாறு வற்புறுத்தப்பட்டனர். அக்டோபர் 8ஆம் திகதி பௌர்ணமி போயா நாள். அந்நாளே இதற்குத் தேர்தெடுக்கப்பட்டது. அக்டோபர் 3ஆம் திகதி ஆறு நாள் அணிவகுப்பைத் தொடங்கி, அக்டோபர் 8ஆம் திகதி வெகுஜன பேரணிக்கு சரியான நேரத்தில் கண்டியை அடைவது ஜே.ஆரின் திட்டமாக இருந்தது. அணிவகுப்பவர்கள், தங்களை யாத்ரீகர்கள் என்று வர்ணித்து, ஒவ்வொரு நாளும் 12 மைல்கள் நடக்க வேண்டியிருந்தது.

முதல் நாள் ஊர்வலத்தில் ஓய்வில் இருந்த டட்லி சேனாநாயாக்கா, இளந்தலைவரான ரணசிங்க பிரேமதாச ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். முதல் நாள் நடைபயணம் வெற்றிகரமாக நிறைவேறியது. அத்தனகல்லை தேர்தல் தொகுதியில் உள்ள பௌத்த விகாரை ஒன்றில் நடைபயணத்தின் இரண்டாம் கட்டத்தை முடிக்க ஜே.ஆர் திட்டமிட்டார். அத்தனகல்லை பண்டாரநாயக்காவின் சொந்தத் தொகுதி. அப்பிரதேசத்தின் பூர்வ குடிகள் பண்டாரநாயக்க குடும்பத்தினர். எனவே தங்களது சொந்தப் பகுதியிலேயே ஜே.ஆர் அணிவகுத்து வந்து இரவு தங்க அனுமதிப்பது அரசியல் சவாலாகவும் தனிப்பட்ட அவமானமாகவும் பார்க்கப்பட்டது. அதேவேளை அரசாங்கத்தில் இருந்த முற்போக்குச் சக்திகள் இந்தக் கண்டி யாத்திரை இனமுரண்பாட்டை இன்னும் கூர்மையடைய வைக்கும் என்று நம்பினர். அதில் முதன்மையானவர் எஸ்.டி.பண்டாநாயக்க.

எஸ்.டி.பண்டாரநாயக்க, பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் உறவினர். இருவரும் பண்டாநாயக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை நிறுவிய முதன்மையாளர்களில் எஸ்.டி.பண்டாநாயக்கவும் ஒருவர். 1952இல் பாராளுமன்றுக்குத் தெரிவான ஒருசில ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளர்களில் இவரும் ஒருவர். அக்காலத்தில் பாராளுமன்றில் ஆங்கிலத்தில் பேசும் வழக்கம் இருந்தது. ஆங்கிலத்தில் நல்ல புலமை கொண்ட எஸ்.டி.பண்டாநாயக்க தனது கன்னிப் பேச்சைச் சிங்களத்திலேயே நிகழ்த்தினார். உரை முடிய சபைத்தலைவர் இவரை ஆங்கிலத்தில் உரையாடும்படி கேட்டார். அதற்கு பதிலளித்த எஸ்.டி. பண்டாநாயக்க தன்னால் தமிழில் உரையாட முடியாததை இட்டு வருந்துவதாகவும் நாட்டில் பெரும்பான்மையோரால் விளங்கிக் கொள்ளப்படாத ஒரு அந்நிய மொழியான ஆங்கிலத்தில் உரையாட வேண்டும் என்று கேள்வி எழுப்பி சபையை சலசலப்புடைய செய்தவர். எஸ்.டி.பண்டாநாயக்க தனிச்சிங்கள கொள்கையை எதிர்த்தார். அது நாட்டுக்கு நல்லதல்ல என்றும் எல்லோரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார்.

கண்டி யாத்திரை மிகவும் வன்மத்துடனும் உள்நோக்குடன் நடைபெறுகிறது என்பதை எஸ்.டி.பண்டாநாயக்க உள்ளிட்ட சிலர் உணர்ந்து கொண்டார். பிரதமரின் உதவியோடு எஸ்.டி.பண்டாரநாயக்க அதிர்ச்சியையும் பிரமிப்பையும் ஏற்படுத்தும் வகையில் யாத்திரையைத் தடுப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்தார். மறுநாள் காலை நேரத்தில் கொழும்பு-கண்டி வீதியில் இம்புல்கொடையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அணிவகுப்பவர்கள் அடைவார்கள் என்று எதிர்பார்த்து தனது வியூகத்தை வரைந்தார். சாலையில் ஒரு குறிப்பிட்ட இடம் ‘கெரில்லா’ தாக்குதலுக்கு மிகவும் சாதகமாக இருந்தது. சாலை குறுகலானது மற்றும் ஒரு குறுகிய வளைவைச் சுற்றி இருபுறமும் கரைகள் அல்லது சிறிய குன்றுகள் இருந்தன. தாக்குதல் நடத்துவதற்கு இது ஒரு சிறந்த இடமாக இருந்தது.

விடியற்காலையில் ஐக்கிய தேசியக் கட்சி அணிவகுப்பை மீண்டும் ஆரம்பித்தது. மூன்று மைல் தூர ஊர்வலத்தில் சுமார் 7:20 மணியளவில் ஐ.தே.க இம்புல்கொடையை அடைந்தது. ஒரு கட்டத்தில் இரண்டு வாகனங்கள் வீதியின் நடுவில் நிறுத்தப்பட்டிருப்பதை அணிவகுப்பவர்கள் கண்டனர். இரண்டு வாகனங்களுக்கும் இடையில் ஒரு மனிதன் சாலையில் படுத்திருந்தார். அது வேறு யாருமல்ல, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்க. அவ்விரு வாகனங்களுக்குப் பின்னால் சுமார் 150 பேர் சாலையில் அமர்ந்திருந்தனர். 500க்கும் மேற்பட்டோர் சாலையின் இருபுறமும் அணிவகுத்துச் சென்றவர்கள் மீது வீசப்படும் பொருட்களுடன் நின்று கொண்டிருந்தனர். வீதியில் நின்ற வாகனங்களில் ஒன்று எஸ்.டி.பண்டாரநாயக்கவுக்கு சொந்தமான வோக்ஸ்வேகன். கம்பஹா மக்கள் இதனை முன்னதாக அவருக்கு வழங்கியிருந்தனர். மற்றைய வாகனம் எஸ்.டியின் அரசியல் நண்பரான டாக்டர் எம்.சி.சந்திரசேனாவுக்கு சொந்தமானது. அவரும் அங்கிருந்தார்.

கண்டி யாத்திரை தடுத்து நிறுத்தப்பட்டது. அப்பகுதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியான டி.எஸ்.தம்பையா வழிமறிப்பவர்களை விலகிக்கொள்ளும்படி கேட்டார். இதற்குப் பதிலளித்த எஸ்.டி, தாங்கள் யாரையும் தடுக்கவில்லை என்றும் நாட்டின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் இந்த யாத்திரைக்கு எதிராக அமைதி வழியிலேயே தாம் போராடுவதாக வாதிட்டார். வேறுவழியின்றி பஸ்களில் ஏறி ஜே.ஆரும் மற்றோரும் மீண்டும் கொழும்பு திரும்ப நேர்ந்தது. இதனைத் தொடர்ந்து எஸ்.டி.பண்டாநாயக்க ‘இம்புல்கொடே வீரயா’ என்று அழைக்கப்பட்டார். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் கண்டி யாத்திரை நிறுத்தப்பட்டமையானது முக்கியமான ஒரு நிகழ்வு. ஆனால், அதற்குரிய மரியாதை எமது வரலாற்றுப் பக்கங்களில் இல்லை.

## கடிதங்கள்

### சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கவும்

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிளாலி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதாவது குறித்த பிரதேசத்தில் இருந்து பெருமளவான மணல் டிப்பர் வாகனங்களில் நாளாந்தம் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்றும் இதனைத் தடுக்க வேண்டிய பளை பொலிஸார் இதற்கு ஆதரவாகவே செயற்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் குறித்த பகுதிக்கான 13 கிலோமீட்டர் நீளமான வீதி மிகமோசமாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் பிரதேச பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே, சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தி, அந்த குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டவிரோதமான செயற்பாடுகள் தொடருமாயின், அப்பகுதியில் இயற்கை வளங்கள் அழிந்துவிடும் என்றும் எச்சரித்துள்ளனர்.

- யது பாஸ்கரன்

# Sun Siyam பாசிக்குடா இலங்கையில் மீண்டும் செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றது

Sun Siyam Resorts இன் கீழ் காணப்படும் புட்டிக் ஹோட்டல் தொடரின் பெருமைக்குரிய அங்கமாக அமைந்துள்ள இலங்கையின் Sun Siyam பாசிக்குடா, 2023 நவம்பர் 17ஆம் திகதியாகிய இன்று முதல் தனது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. விருந்தினர்களுக்கு நவீன சொகுசான அனுபவங்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் நவீன மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், விருந்தினர்களுக்கு சொகுசான அனுபவத்தை வழங்குவதுடன், இலங்கையின் கலாசார பெறுமதிகளை உணர்த்தும் வகையிலும் அமைந்திருக்கும்.



Sun Siyam பாசிக்குடாவின் பொது முகாமையாளர் அர்ஷத் ரிஃபாய், ஹோட்டல் பொது மக்களுக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார். உள்நாட்டு சமூகத்தாருக்கு ஆதரவளித்து வாய்ப்பளிப்பதற்கான தமது உறுதியான அர்ப்பணிப்பு தொடர்பில் அவர் தெரிவித்திருந்ததுடன், குறிப்பாக பலகைசார் மரத்தளபாட செயற்பாடுகளில் உள்ளூர் சமூகத்தாரின் ஆதரவைப் பெற்றிருந்தமை தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் உள்நாட்டிலிருந்து பெறப்பட்ட தயாரிப்புகளினூடாக ஹோட்டலின் நவீனமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும், உள்நாட்டு கலைஞர்கள் மற்றும் சமூகத்தாருடன் இணைந்து தளபாடங்கள், செடிவிளக்குகள் (chandeliers) மற்றும் மூட்டுவேலைப்பாடுகள் (joinery) போன்றவற்றை முன்னெடுத்திருந்ததாகவும் அர்ஷத் குறிப்பிட்டார்.

இந்த ஹோட்டலில் பெருமளவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வர்ண அமைப்புகள் முதல் சாதனங்கள் மற்றும் பொருத்திகள் போன்றன வரையில் அனைத்து அம்சங்கள் மாற்றப்பட்டிருந்த போதிலும், ஹோட்டலின் அசல் கட்டமைப்பில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை. இலங்கையின் அழகுடன் ஆழமாக கலந்த மனம் மறவாத அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதற்கான Sun Siyam பாசிக்குடாவின் செயற்பாடுகளில் புதிய அத்தியாயமாக இந்த மீளத் திறப்பு அமைந்துள்ளது.

2014ஆம் ஆண்டில் Sun Aqua பாசிக்குடா எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஹோட்டல், 2020ஆம் ஆண்டில் மீளவர்த்தக நாம பெயரிடலுக்குட்படுத்தப்பட்டு Sun Siyam ரிசோர்ட்ஸ் ஹோட்டல் தொடரின் அங்கமாக, Sun Siyam பாசிக்குடா எனப் பெயர் மாற்றப்பட்டது.

Sun Siyam ரிசோர்ட்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி தீபக் பூநேடி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ரிசோர்ட் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை மற்றும் அதனைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் காணப்பட்ட தொற்றுப் பரவல் ஆகியவற்றினால், இந்த ஹோட்டலை முழுமையாக மெருகேற்றம் செய்வதற்கான பெறுமதி வாய்ந்த வாய்ப்பு கிடைத்திருந்தது. Studio Sixty7 உடன் கைகோர்த்து, ஆரம்ப கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், மொத்த ஹோட்டலையும் நாம் மீள வடிவமைப்பு செய்திருந்தோம்" என்றார்.

தீபக் மேலும் தெரிவிக்கையில், "சேவை வழங்கல்கள் மற்றும் வசதிகள் முதல் சேவை மட்டம் வரையில் அனுபவத்தை நாம் மாற்றியமைத்துள்ளதுடன், புகழ்பெற்ற Sun Siyam நோக்கத்துடன் ஒன்றிணையச் செய்துள்ளோம். புகழ்பெற்ற Sun Siyam ரிசோர்ட் புட்டிக் தெரிவுகளில் ஒன்றாக இந்த ஹோட்டலையும் மீள அறிமுகம் செய்வதையிட்டு நாம் பெருமை கொள்வதுடன், இலங்கையின் இந்த பகுதியின் சிறப்பம்சங்களை அனுபவிப்பதற்கு வருமாறு அனைத்து விருந்தினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்" என்றார்.

ஐந்து நட்சத்திர புட்டிக் ஹோட்டல், இலங்கையின் மாசற்ற கிழக்கு கரையோரப் பகுதியில் அமைந்துள்ளது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சுமார் ஆறு மணி நேரத்தில் பயணிக்கக்கூடியதாக இருக்கும். 34 இடவசதிகளைக் கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கையறைகள், பூந்தோட்டப் பகுதி அல்லது கடற்கரை பெவிலியன்கள், நீச்சல் தடாகத்துடன் அல்லது நீச்சல் தடாகமின்றி பெற்றுக் கொள்ள முடிவதுடன், ஜோடியாக, குடும்பமாக அல்லது நண்பர்கள் குழுவாக பயணிப்போருக்கு பிரத்தியேகமான கரையோர அனுபவத்தை உறுதி செய்வதாக Sun Siyam பாசிக்குடா அமைந்திருக்கும்.


உள்ளக வடிவமைப்பு மறுசீரமைப்பில் முக்கிய பங்காற்றியிருந்த Studio Sixty7இன் ஸ்தாபகர்களும் புத்தாக்க பணிப்பாளர்களுமான லீ மெக்நிகோல் மற்றும் ஜோஸ் ரிவேரோ ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், "Sun Siyam ரிசோர்ட்களுடன் இணைந்து Sun Siyam பாசிக்குடாவின் மறுபிறப்பை வெளிப்படுத்துவதில் Studio Sixty7 மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. இந்த ஹோட்டல் திட்டத்துக்கான எமது வடிவமைப்பு கொள்கையானது, 5 நட்சத்திர புட்டிக் உள்ளக அலங்காரத்துடன், மொனோகுரோமெட்டிக் உள்ளக வடிவமைப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. இந்த திட்டத்தை வடிவமைக்கும் போது, பாசிக்குடா கரையோரப் பகுதியில் பிரத்தியேகமான, மதிநுட்பமான மற்றும் கண்கவர் உள்ளக அலங்காரத்தை ஏற்படுத்த தீர்மானித்திருந்தோம்" என்றனர்.

அவர்கள் மேலும் குறிப்பிடுகையில், "இந்த ஹோட்டலுக்கான தளபாடங்கள் மற்றும் இணைப்பு பொருத்திகளை உருவாக்குகையில் உள்ளூர் கலைஞர்கள் மற்றும் அங்கத்தவர்களுடன் பணியாற்ற கிடைத்தமை சிறப்பம்சமாகும். அதனூடாக இலங்கையின் அழகு இந்த ஹோட்டல் அலங்கார வடிவமைப்பினூடாக வெளிப்படுத்தபடுவதை உறுதி செய்ய முடிந்திருந்தது. ஈடுபாட்டை பேணியிருந்த அனைவரின் அன்பின் வெளிப்பாடாக இந்த திட்டம் அமைந்துள்ளதுடன், இலங்கையில் பார்வையிட வேண்டிய ஒரு பகுதியாக இந்த ஹோட்டலை வடிவமைக்க முடிந்தது. அனைவரும் இந்த அனுபவத்தை பெற்றுக் கொள்ள வருமாறு நாம் அழைக்கின்றோம்" என்றார்.

### SUN SIYAM RESORTS பாசிக்குடாவின் நிர்வாக செயற்பாடுகளுக்கு

# நிபுணர்கள் நியமனம்

மாலைதீவுகளின் விருந்தோம்பல் குழும ஹோட்டல் தொடரான Sun Siyam Resorts, அதன் பாசிக்குடா ஹோட்டலின் பொது முகாமையாளராக அர்ஷத் ரிஃபாய் மற்றும் விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளராக துலங்க டி மெல் ஆகியோரை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. 2023 நவம்பர் 17ஆம் திகதி இந்த ஐந்து நட்சத்திர புட்டிக் ஹோட்டல் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மீள ஆரம்பிக்கப்படுவதுடன், இந்த புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



இலங்கையின் கலாசார அம்சங்களுடன் சொகுசான உள்ளம்சங்களைக் கொண்டு, விருந்தினர்களுக்கு சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த ஹோட்டல் மாற்றத்துக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஹோட்டலின் நிர்வாக செயற்பாடுகளுக்கு அர்ஷத் மற்றும் துலங்க ஆகியோர் பெருமளவு தொழிற்துறை அனுபவத்தை சேர்த்துள்ளனர்.

பொது முகாமையாளர் எனும் வகையில், இலங்கைப் பிரஜையான அர்ஷத், Sun Siyam பாசிக்குடாவின் ஒட்டுமொத்த செயற்பாடுகளுக்கும் மேற்பார்வையாளராக திகழ்வார். இவர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் குழும பொது முகாமையாளர் ஆகியோருடன் இணைந்து செயலாற்றுவார். தகவல் தொழில்நுட்பத்துறையில் தமது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்திருந்த அர்ஷத், செயற்பாடுகள் பிரிவுக்கு படிப்படியாக மாறியிருந்தார். இந்தத் துறையில் கடந்த காலங்களில் பெருமளவு அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். இந்த பதவியை பொறுப்பேற்கும் முன்னர், இவர் Sun Aqua பாசிக்குடாவின் செயற்பாட்டு முகாமையாளராக பணியாற்றியிருந்தார். 2020இல் இந்த Sun Aqua பாசிக்குடா, Sun Siyam பாசிக்குடா என பெயர்மாற்றம் செய்யப்பட்டிருந்தது. Sun Siyam Resorts இல் சுமார் ஒரு தசாப்த காலத்துக்கு மேலான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ள அர்ஷத், Sun Siyam பாசிக்குடாவின் ஆரம்ப நிர்மாண செயற்பாடுகள் முதல் தமது தொடர்புகளைக் கொண்டுள்ளதுடன், ஹோட்டலின் ஒவ்வொரு பிரிவின் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்துள்ளார்.

அர்ஷத் கருத்துத் தெரிவிக்கையில், "சிந்தனைகள், நோக்கம் மற்றும் ஆக்கத்திறன் போன்றன வெளிப்படுத்தப்படும் விறுவிறுப்பான இந்த நிறுவனத்தில் அங்கம் வகிப்பதையிட்டு நான் மிகவும் பெருமை கொள்கின்றேன். இலங்கையில் சுற்றுலாத் துறை மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ள நிலையில், ஹோட்டலின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குவதுடன், உள்நாட்டு பன்முகத்தன்மை நிறைந்த கலாசார அம்சங்களுடனான தங்குமிட அனுபவத்தை எமது விருந்தினர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து, நாட்டின் சுற்றுலாத்துறைக்கும் பங்களிப்பை வழங்கி, பொருளாதாரத்துக்கும் பங்களிப்புச் செய்வது எனது பிரதான பணியாக அமைந்திருக்கும்" என்றார்.

Sun Siyam பாசிக்குடாவின் சகல சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் சார்ந்த செயற்பாடுகளுக்கும் தலைமைத்துவமளிக்கும் இலங்கைப் பிரஜையான துலங்க, நாட்டின் விருந்தோம்பல் துறையில் 13 வருட கால முன் அனுபவத்தைக் கொண்டுள்ளார். ANI Private Resorts, Onyx Hospitality, UGA Escapes, Resplendent Ceylon, Aman Resorts மற்றும் Cinnamon Grand ஆகியவற்றில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ள துலங்க, அமைவிடம் மற்றும் சேவை நிலைப்படுத்தல் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றுவார்.

துலங்க கருத்துத் தெரிவிக்கையில், "கொவிட்-19 முதல் பொருளாதார நெருக்கடி வரை இலங்கை பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும், மீண்டெழுந்திறனை இலங்கை எப்போதும் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை உறுதியான பொருளாதார மீட்சியை நோக்கி நகர்ந்து வரும் நிலையில், சுற்றுலாத் துறைக்கும் நேர்த்தியான புறத்தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதையடுத்து, Sun Siyam பாசிக்குடாவுக்கு நாம் தூரநோக்குடைய திட்டங்களை வகுத்துள்ளதுடன், இலங்கையை விடுமுறையை செலவிட சிறந்த பகுதியாக திகழச் செய்வதிலும் பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளோம். ந்தப் பயணத்தில் பங்கேற்பதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்." என்றார்.



# பசியின் மொழி

பிரசவ அறையில் இருந்து
விடுதிக்கு மாற்றப்படுகிறேன்.

கட்டிலில் பொதுவான
படுக்கை விரிப்பை
சரிபார்த்து
தன்னை விரிப்பாக மாற்றுகிறாள்
அம்மா.

பக்கத்து கட்டில்களை
பார்க்க வந்தவர்களும்
என்னை ஓர்க்கண்ணால் பார்ப்பதை
கண்ணூறு கழித்து
உச்சி முகர்கிறாள்.

ஊறும் பாலை ஊட்டுவதில்
ஒரு வெட்கத்தையும் பரிசளித்து
உறுதியான பிடியில்
அணைத்தும் கொள்கிறாள்.



பயமும் பதட்டமும்
ஆங்காங்கே தோன்றி
மறையும்
முகத்தில் எனது முகமும்
ஒட்டிக்கிடக்கிறது.

வெட்டப்பட்ட தொப்புள் கொடி
பார்த்து
கைகளுக்குள்
என்னை
அவள் பக்குவப்படுத்தும் பொழுதெல்லாம்
உதடுகளை அசைக்கிறேன்
பசி என்று பெயர் சூட்டி
உச்சியையும் முகர்கிறாள்
இப்போது அவள்.

பசி
நம்பிக்கை மொழியாகி
விடுதியை நிறைத்துக்கொள்கிறது.

காரையன் கதன்

# சமத்தும்



சொற்களே இணைய மறுக்கிற போது
மனங்களும், இனங்களும்
எப்படி இணையலாம்.

எப்படி ஆரம்பிப்பது
எந்தப் பாதையினூடு சென்றிணைவது

இணைந்து பயணித்தல் பற்றிய
வெறிமிகு ஆசையுடன் நீ வருவாயா?
அல்லது
வாய்ச்சொற்களால்
வார்த்தைகள் தருவாயா?

இனங்களை வெல்லுதல் என்பதின்
முதல் நகர்வாய்
மனங்களை வெல்லும்
உணர்வுகள் விதைபட
கலப்படமற்ற தூய நட்பின்
செழிப்புமிகு வாசனை தூவ வருவாயா?

எத்தனை ஏக்கங்களையும்
கனவுகளையும் சுமந்து நிற்கிறது
வெட்ட வெளியில்
மொட்டையாய் நிற்கிற இரு இனங்கள்.

பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்







# சருகு

ஆடியில் வேர் கெட்டு
ஓணத்தில் புதைக்கப்பட்டதோ!
ஓரமாய் நான் கிடக்க
உனக்கேன் ஓர் நிதி?
பாரினில் நீ நானும்
அழுகிய அந்தரங்கங்கள்
ஆண்டு தோறும் ஆற்றிலிடும் பிண்டமாக
கரையும் உன் நினைவுகள்
நீளாத உன் ஆத்மாக்கு
முத்தியில் முற்றிட்டு விடுதலையோ!
உண்மை உழலும் உயிரினுள்;
உறங்கிடும் உடல்;
மறுத்திடும்
மீள் சுழற்சியை பூமியில்
பூதகணங்கள் என்றே – உன்
புகைப்படம் மட்டும் கடவுளாய் சில காலம்
நீ வேடம் தாங்கி அரங்கேற்றிய மேடைகளில்
வேற்று நாடகத்தாருக்கு வாய்ப்போ?
வேற்றுமையில் முதன்மை பெற்றேன்
மாயவன் ஏப்பமிட – உன்
உயிர் வாசம் என்றோ?
காத்திருந்தே கரைதொடு
கானல் நீர் ஆன்றோ!

பி.சரணியா
திருகோணமலை

# கிறுக்கி

இந்த
இரவுப்பொழுது
இஞ்சளவும் நகராது
செங்குத்தாய்
நிற்கிறது

எங்கோ
ஓர் சிற்றுந்து
மழைநீரை கதறவிட்டபடி
விரட்டிச் செல்கிறது

பேய்களை துரத்துமளவுக்கு
மந்திரங்களை உச்சரித்தபடி
அந்த பேய்மழை
இன்னும் அகோரமாய்
அடித்துப் பெய்கிறது

சாளரங்களில்
முகம்புதைத்தபடி
ஊடுருவிப் பார்க்கிறேன்
தெருவிளக்குகள்
நேந்துகட்டிய
மஞ்சள் துணிகளைப்போல்
அதே இடத்தில் விழிப்போடு

அறையெங்கும்
நிரம்பிக்கிடக்கும் அந்த
டிக்...டிக்...நிமிடச்சத்தம்
அவள் நினைவுகளை
எண்ணிக்கொண்டே
இறந்தகால
பொழுதொன்றை
போர்த்திக்கொள்கிறது...!

சுமி – பிரான்ஸ்





காசா

# மருத்துவமனைக்குள் இஸ்ரேல் இராணுவம் நுழைந்தது



காசா மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் இராணுவம், தற்போது ஹமாஸ் அமைப்பினர் எங்கு மறைந்துள்ளனர் எனத் தேடிவருகின்றனர். தொடக்கத்தில் இருந்தே அல் ஷிபா மருத்துவமனையில் ஹமாஸ் அமைப்பினர் மறைந்து இருந்து செயல்பட்டு வருவதாக இஸ்ரேல் இராணுவம் குற்றம்சாட்டியிருந்தது. ஆனால், மருத்துவ நிர்வாகம் இந்த குற்றச்சாட்டை தொடர்ந்து மறுத்து வருகிறது.

இந்நிலையில், மருத்துவமனையின் வளாகத்திற்குள் இராணுவத்தின் டாங்கிகளுடன் இஸ்ரேல் இராணுவத்தினர் மருத்துவமனை கட்டடத்திற்குள் சென்றுள்ளனர். அவசரப்பிரிவு, சத்திர சிகிச்சை நடைபெறும் இடங்கள், திவிர சிசிக்சை பிரிவுகள் என எல்லா இடங்களில் சென்று ஹமாஸ் அமைப்பினர் செயல்பாடு உள்ளதா? என ஆராய்ந்துள்ளனர். இந்த தகவலை அல் ஷிபா மருத்துவமனையின் இயக்குநர் முகமது தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்து

## 140 மில்லியன் வருட டைனோசரின் கால் தடம்

இங்கிலாந்தின் டார்செட் கவுன்டியில் உள்ள பூலே ஹார்பர் பகுதியில் உள்ள தீவுகளில் ஒன்று பிரவுன்சீ தீவு இங்குள்ள இயற்கை வனாந்திர பகுதியில் ஒரு டைனோசரின் கால் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது 140 மில்லியன் வருடங்கள் பழைமை உடையது என தெரியவந்துள்ளது.

இதனை இகுனாடோன்ஷியன் (igunodontian) எனும் வகையை சேர்ந்த டைனோசரின் கால் அடையாளம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கால் அடையாளத்தில் 3 விரல்கள் காணப்படுகின்றன.

அந்த தீவிலுள்ள பிரவுன்சீ கேஸில் (Browsea Castle) பகுதியில் ஒரு வனத்துறை அதிகாரி சென்று கொண்டிருக்கும் போது கண்டுபிடித்துள்ளார்.

கனடா

## ட்ருடோவை சுற்றிவளைத்த போராட்டக்காரர்கள்

பலஸ்தீனத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் போர் நிறுத்த கோரி பல நாடுகளில் பலர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்நிலையில், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ உணவருந்திக் கொண்டிருந்த வான்கூவர் என்ற உணவகத்தை திடீர் என 250 பலஸ்தீனிய ஆதரவு போராட்டக்காரர்கள் சுற்றி வளைத்து இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போரில் போர் நிறுத்தம் செய்ய கோரி கோஷம் எழுப்பியுள்ளனர்.

மேலும், வான்கூவர் என்ற உணவகத்தின் வெளியே நடந்த போராட்டத்தை 100ற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கொண்டு கலைத்ததாக அந்நாட்டு அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

உத்தரப் பிரதேசம்

## ரயிலில் தீ விபத்து: 19 பேர் காயம்

உத்தரப் பிரதேச மாநிலத்தின் எட்டாவா அருகே டெல்லி - சஹர்சா வைசாலி அதிவிரைவு ரயில் பெட்டி ஒன்றில் வியாழக்கிழமை (16) தீ விபத்து ஏற்பட்டுள்ளது.



தீ விபத்துக்குள்ளான ரயில் டெல்லியில் இருந்து உத்தரப் பிரதேசத்தின் எட்டாவாவை நெருங்கிக் கொண்டிருந்த போது, ரயிலின் எஸ்.6 பெட்டியில் இருந்து புகை வந்ததைப் பார்த்த பயணிகள் சிலர் ரயிலில் இருந்து ஊழியர்களுக்கு தகவல் அளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, ரயில் மெயின்பூரி சந்திப்புக்கு முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது.

ரயில்வே பொலிஸார் (ஜி.ஆர்.பி) மற்றும் ரயில்வே பாதுகாப்பு படை (ஆர்.பி.எஃப்) பொலிஸாரின் ஒரு மணிநேர தீவிர முயற்சிக்கு பின்னர் தீ அணைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகாரிகளின் தகவலின்படி, இந்தத் தீ விபத்தில் 19 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 11 பேர் மேலதிக சிகிச்சைக்காக சாய்ஃபை மருத்துவப் பல்கலைகழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து ஆக்ரா ஜி.ஆர்.பி காவல் கண்காணிப்பாளர் கூறுகையில், "இந்த விபத்தில் உயிரிழப்புகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தீவிர விசாரணைக்கு பின்னர் இத்தீவிபத்துக்கான காரணம் குறித்து தெரிய வரும்" என்று தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான்

## "தலைவர்கள் ஒற்றுமையாக உள்ளனர்"

ராஜஸ்தான் மாநிலத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், வயநாடு தொகுதி எம்.பி.யுமான ராகுல் காந்தி பல்வேறு இடங்களில் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

சுருவில் உள்ள தாரா நகரில் நடைபெறும் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசுவதற்காக புறப்பட்டபோது பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு பதிலளித்த ராகுல் காந்தி, "நாங்கள் ஒற்றுமைய உள்ளோம். ஒற்றுமையாக இருப்போம். ராஜஸ்தான் சட்டசபை தேர்தல் காங்கிரஸ் கட்சி அபார வெற்றி பெறும்" என தெரிவித்துள்ளார்.



மேலும் ராகுல் காந்தி, ஹனுமான்கார்ஹ், ஸ்ரீகங்காநகர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் பேரணியில் கலந்த கொள்ளவுள்மை குறிப்பிடத்தக்கது.

உத்தரகாண்ட்

## கேதார்நாத் கோவில் நடை அடைப்பு



உத்தரகாண்ட் மாநிலத்தின் இமயமலையில் பிரசித்தி பெற்ற கேதார்நாத் கோவில். குளிர்காலத்தில் இந்த கோவில் முழுவதும் பனியால் சூழப்பட்டுவிடும் என்பதால் ஆறு மாதங்களுக்கு நடை சாத்தப்படுவது வழக்கம்.

இந்நிலையில், கேதார்நாத் கோவில் பகுதியில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு நிலவி வரும் சூழலில், கோவிலின் கதவுகள் அடைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் 2,300-க்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்று, சிவபெருமானை வழிபட்டதாக கேதார்நாத் கோவில் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கோவிலின் நடை சாத்தப்பட்ட பிறகு கேதார்தாத் சிவனின் பஞ்சமுக விக்கிரகம், உகிமடம் பகுதியில் உள்ள ஓம்காரேஸ்வர் கோவிலுக்கு கொண்டு செல்லப்பட்டு குளிர்காலம் முழுவதும் அங்கு வழிபடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.



உலகக் கிண்ண

# இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நியூசிலாந்துடனான முதலாவது அரையிறுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 47 (29), ஷுப்மன் கில்லின் ஆட்டமிழக்காத 80 (66), விராட் கோலியின் 117 (113), ஷ்ரேயாஸ் ஐயரின் 105 (70), லோகேஷ் ராகுலின் ஆட்டமிழக்காத 39 (20) ஓட்டங்களுடன் 50 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 397 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 398 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து ஆரம்பத்திலேயே மொஹமட் ஷமியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்ததுடன், பின்னர் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனும், டரைல் மிற்செல்லும் இனிங்ஸை நகர்த்தியபோதும், வில்லியம்ஸனையும், அடுத்து வந்த டொம் லேதமும் ஒரே ஓவரில் ஷமி வீழ்த்தினார்.

பின்னர் கிளென் பிலிப்ஸின் பங்களிப்பில் மிற்செல் இனிங்ஸைக் கொண்டு சென்றபோதும் ஜஸ்பிரிட் பும்ரா, குல்தீப் யாதவ் விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், மிற்செல்லை ஷமி வீழ்த்தி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 327 ஓட்டங்களையே பெற்று 70 ஓட்டங்களால் நியூசிலாந்து தோல்வியடைவதை உறுதிப்படுத்தினார். ஷமி மொத்தமாக 7 விக்கெட்டுகளைச் சாய்த்ததோடு, மிற்செல் 134 (119), வில்லியம்ஸன் 69 (73), பிலிப்ஸ் 41 (33) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஷமி தெரிவானார்.

ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலையை

## வீழ்த்திய கல்முனை சாஹிரா கல்லூரி

அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குட்பட்ட பிரிவு மூன்று கடினபந்து கிரிக்கெட் தொடரில், காரைதீவு விபுலானந்த தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற முதலாவது சுற்றின் முதலாவது போட்டியில் ஏறாவூர் மாக்கான் தேசிய பாடசாலையை கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய ஏறாவூர் மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலை 23.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 60 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி, 6.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் வெற்றி இலக்கையடைந்தது.





## சாதனைகளை முறியடித்த கோலி

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அதிக சதங்கள் பெற்ற, சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரொன்றில் அதிக ஓட்டங்கள் பெற்ற இந்தியாவின் முன்னாள் தலைசிறந்த துடுப்பாட்டவீரரான சச்சின் டென்டுல்கரின் சாதனையை இந்தியாவின் விராட் கோலி முறியடித்துள்ளார்.

நியூசிலாந்துடனான புதன்கிழமை (15) முதலாவது அரையிறுதிப் போட்டியிலேயே குறித்த டென்டுல்கரின் சாதனைகளை கோலி முறியடித்திருந்தார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் டென்டுல்கர் 49 சதங்களைப் பெற்றுள்ள நிலையில், குறித்த போட்டியில் பெற்ற சதத்துடன் 50 சதங்களை கோலி பெற்றுள்ளார்.

இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் 673 ஓட்டங்களை டென்டுல்கர் பெற்றிருந்த நிலையில், தற்போதைய உலகக் கிண்ணத் தொடரில் 711 ஓட்டங்களை கோலி பெற்றுள்ளார்.



அணித்தலைவர் பதவியிலிருந்து

## இராஜினாமா செய்த பாபர் அஸாம்

பாகிஸ்தான் அணியின் அணித்தலைவர் பதவியிலிருந்து பாபர் அஸாம் இராஜினாமா செய்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைவர் பதவியில் தொடர அஸாமுக்குத் தெரிவொன்று வழங்கப்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்திருந்த நிலையில், அனைத்து வகையான போட்டிகளின் அணித்தலைவர் பதவியிலிருந்தும் அஸாம் இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான அணித்தலைவராக ஷகீன் ஷா அஃப்ரிடியும், டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவராக ஷண் மசூட்டையும் பாகிஸ்தான் நியமித்துள்ளது.

பாகிஸ்தான் அணியில் உள்ளே வருவதும் போவதுமாகவுள்ள மசூட் அவ்வளவாக பெறுபேறுகளை பெறாத மசூட் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையானது பேசுபொருளாகக் காணப்படுகிறது.

இதேவேளை, அணியின் இயக்குநராக பாகிஸ்தானின் முன்னாள் வீரர் மொஹமட் ஹபீஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், தலைமைப் பயிற்றுவிப்பாளராக யுனிஸ் கான் நியமிக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை , 17 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.